**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>
<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022 ம் வருடம் ஜனவரி திங்கள் 05 ம் நாள் புதன்கிழமை</u>
**<u>அ.வ.எண்.279/2021 இல் இ.ம.எண்.02/2021</u>**

V.ராமநாதன் ... மனுதாரர் /வாதி

/ எதிர் /

1.முத்து கருப்பன்
2.M.ராமநாதன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 13.12.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்தில் உள்ள தாவா மனுச் சொத்தினை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ, உறவினர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதியின் பாட்டனாரான ஈஸ்வர செட்டியார் என்பவர் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான P.R.M.S.ராமநாதன் என்பவருடன் ஏற்படுத்திக் கொண்ட வாய்மொழி ஒப்பந்ததின் அடிப்படையில் தாவா சொத்தினை வாடகைக்கு எடுத்து அதில் 1960ம் ஆண்டு வாக்கில் துணி வியாபார தொழிலை தொடங்கினார். நாளடைவில் மேற்படி துணி வியாபார கடையானது பொள்ளாச்சி வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற கடையாக மாறியது. மேற்படி ஈஸ்வர செட்டியார் அவரது வாழ்நாள் வரை அவரது மகனான வேணுகோபால் என்பவருடன் சேர்ந்து துணி வியாபார தொழிலை கவனித்து வந்த நிலையில் அவருக்கு பின்னிட்டு வேணுகோபால் P.R.M.S.ராமநாதன் செட்டியாருக்கு முறையாக வாடகைக்தொகையை செலுத்தி வந்துள்ளார். மேற்படி மனுதாரர் / வாதியின் தகப்பனாரான வேணுகோபால் அவர்கள் 83வது வயதில் 2014ம் ஆண்டில் இறந்து விட்ட பிறகு, மனுதாரர் / வாதி ஈஸ்வர செட்டியார் துணி வியாபாரம் என்ற பெயரில் தற்போது வரை மேற்படி துணி வியாபார தொழிலை செய்து வந்து மனுச் சொத்திற்குண்டான வாடகைத் தொகையை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு செலுத்தி வருகிறார். 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி, 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மகன். 1960ம் ஆண்டில் கடையை வாடகைக்கு எடுத்த சமயத்தில் வாடகைத் தொகையானது ரூ.500/−ஆக இருந்த நிலையில், பின்னர் அது படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்பொழுது ரூ.6,000/− ஆக உள்ள நிலையில் பிரதி ஆங்கில மாதம் 7ம் தேதிக்குள் செலுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் / வாதி வாடகைத் தொகையை எதிர்மனுதாரர்கள் /

பிரதிவாதிகளுக்கு முறையாக செலுத்தி வரும் நிலையில் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான P.R.M.S.ராமநாதன் செட்டியார் அதற்கு ரசீது எதுவும் வழங்கியதில்லை. பல்வேறு பதிகங்களாக மனுதாரர் / வாதியின் மூதாதையர்களுக்கும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மூதாதையர்களுக்கும் இடையே உரிமையாளர் மற்றும் வாடகைத்தாரர் என்ற உறவு சுமூகமாக இருந்து வந்தது. கோவிட்–19 நோய் தொற்றின் காரணமாக கடந்த 2 வருடங்களாக மனுதாரர் / வாதியால் சரிவர வாடகைத் தொகையை செலுத்த இயலவில்லை. அதன் காரணமாக மனுதாரர் / வாதிக்கும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை எழுந்துள்ளது. தாவா மனுச் சொத்தில் வியாபாரம் நடக்காத போதிலும் 07.03.2021ம் தேதி வரை மிகவும் சிரமப்பட்டு வாடகைத் தொகையை மனுதாரர் / வாதி செலுத்தி வந்துள்ளார். மார்ச் மாதம் 2021ம் வருடம் தாவா மனுச் சொத்தை 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி, 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்து விட்டதாக கூறி தாவா மனுச் சொத்திலிருந்து மனுதாரர் / வாதியை காலி செய்ய சொல்லி 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி மிரட்டியுள்ளார். அது மட்டுமல்லாமல் முத்திரை வில்லைகள் ஒட்டப்பட்ட தாள்களிலும், பச்சை பேப்பர்களிலும் மனுதாரர் / வாதியிடம் கையொப்பம் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளார். 04.10.2021ம் தேதியில் மனுச் சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும், அவர்களது வகையாட்களும் வந்து இடையூறு செய்ததை மனுதாரர் / வாதி தடுத்துவிட்டார். மனுச் சொத்தில் மனுதாரர் / வாதி சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்ற நிலையில் சட்டத்திற்குட்பட்டு தான் மனுச் சொத்திலிருந்து மனுதாரர் / வாதியை வெளியேற்ற இயலும் என்ற நிலையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சட்டப்பூர்வமற்ற முறையில் மனுதாரர் / வாதியை மனுச் சொத்திலிருந்து

வெளியேற்ற முயற்சி செய்து வருகின்றனர். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும் உள்ளவர்கள் என்பதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் / வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்ட சமன் நோக்கும் உள்ள நிலையில் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா மனுச் சொத்தில் உள்ள மனுதாரர் / வாதியின் அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான வகையில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பி சார்பு செய்யப்பட்டுள்ள போதிலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் 25.10.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

4)இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5)இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்தில் உள்ள தாவா மனுச் சொத்தினை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ, உறவினர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகளும்,

சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுச் சொத்தில் ஈஸ்வர செட்டியார் துணி வியாபாரம் என்ற பெயரில் மனுதாரர் / வாதி துணி வியாபாரம் செய்து வரும் நிலையில் மனுதாரர் / வாதியின் மூதாதையர்களின் காலத்திலிருந்ததே 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் தகப்பனாருடன் ஏற்படுத்திக் கொண்ட வாய்மொழி வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1960ம் ஆண்டிலிருந்து பல்வேறு ஆண்டுகளாக வியாபாரம் செய்து வரும் நிலையில் கோவிட்–19 நோய் தொற்றின் காரணமாக 07.03.2021ம் தேதியிலிருந்து மனுதாரர் / வாதியால் சரிவர வாடகை தொகையை செலுத்த இயலவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி, 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மகன் என்ற நிலையில் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி, 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கு மனுச் சொத்தினை பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டதாக கூறி மனுதாரர் / வாதியை, 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி மனுச் சொத்திலிருந்து வெளியேற சொல்லி மிரட்டி வருவதாகவும், அதுபோல் பல்வேறு முத்திரை வில்லைகள் ஒட்டப்பட்ட தாள்களிலும், பச்சை பேப்பர்களிலும் வலுக்கட்டாயமாக 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி, மனுதாரர் / வாதியிடம் கையெழுத்து பெற்றுள்ள நிலையில் மனுதாரர் / வாதி மனுச் சொத்தின் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் சட்டத்திற்குட்பட்டு தான் மனுதாரர் / வாதியை வெளியேற்ற முடியும் என்ற நிலையில், மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்ட சமன் நோக்கும் உள்ளது என்பதால் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

8) இரு தரப்பு வாதுரையிலிருந்தும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும் அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

9) மனுதாரர் / வாதி தரப்பில் மனுதாரர் / வாதியின் பாட்டனாரான ஈஸ்வர செட்டியார் என்பவர் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான P.R.M.S.ராமநாதன் செட்டியார் என்பவரிடம் தாவா மனுச் சொத்தை வாய்மொழி ஒப்பந்ததின் அடிப்படையில் வாடகைக்கு பெற்று அதில் துணி வியாபார தொழில் செய்து வந்த நிலையில் மனுதாரர் / வாதியின் பாட்டனார் இறந்து விட்ட பிறகு மனுதாரர் / வாதியின் தகப்பனாரான வேணுகோபால் மேற்படி துணி வியாபார தொழிலை தொடர்ந்து கவனித்து வந்துள்ளார். அவரது இறப்பிற்கு பின்னர் மனுதாரர் / வாதி ஈஸ்வர செட்டியார் துணி வியாபாரம் என்ற பெயரில் மேற்படி வியாபாரத்தை கவனித்து வந்ததாகவும், மனுச் சொத்தினை வாடகைக்கு எடுத்த நாள் முதல் மனுதாரர் / வாதியின் பாட்டனாரும், மனுதாரர் / வாதியின் தகப்பனாரும் வாடகைத் தொகையை முறையாக செலுத்தி வந்த நிலையில், கோவிட்-19 நோய் தொற்றின் காரணமாக வியாபாரம் சரியாக நடக்காத காரணத்தால் 07.03.2021ம் தேதியிலிருந்து வாடகைத் தொகையை சரியாக செலுத்த இயலாத நிலை ஏற்பட்டதால் மனுதாரர் / வாதிக்கும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டுள்ள நிலையில், 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி மனுச் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று கூறி மனுச் சொத்திலிருந்து மனுதாரர் / வாதியை வெளியேற சொல்லி மிரட்டி வருவதாகவும், மனுச் சொத்தில் மனுதாரர் / வாதி சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்ற நிலையில் மனுதாரர் / வாதியை சட்டப்பூர்வமான முறையில் மட்டுமே வெளியேற்ற முடியும் என்பதால் மனுதாரர் / வாதியால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

10) மனுச் சொத்தில் மனுதாரர் / வாதி ஈஸ்வர செட்டியார் துணி வியாபாரம் செய்து வருகிறார் என்பதை நிரூபிக்கும் வகையில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான துணி கொள்முதல் ரசீதுகளும், ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 தொழில் வரி ரசீதுகளும், ம.சா.ஆ.7 முதல் ம.சா.ஆ.11 வரையிலான மின் கட்டண ரசீதுகளும், மனுதாரர் / வாதியின் தகப்பனாரான வேணுகோபால் இறந்ததற்கான இறப்பு சான்று ம.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11) மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களிலிருந்து மனுச் சொத்தில் மனுதாரர் / வாதி துணி வியாபாரம் செய்து வருகிறார் என்பதும், மனு சொத்து அவரது சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்பதும் தெரிய வருகிறது.

12) மனுதாரர் / வாதி தரப்பில் 07.03.2021ம் தேதியிலிருந்து மனுதாரர் / வாதி சரிவர வாடகைத் தொகையை செலுத்த இயலாத காரணத்தால் மனுதாரர் / வாதிக்கும், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி மனுச் சொத்திலிருந்து மனுதாரர் / வாதியை வெளியேற சொல்லி மிரட்டி வருவதாக கூறப்பட்டுள்ளது.

13) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள போதிலும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மனுவில் ஆஜராகி தங்களது எதிர் வாதத்தினை முன் வைக்கவில்லை.

14) மனுதாரர் / வாதி மனுச் சொத்தின் சட்டப்பூர்வமான வாடகைதாரராக இருந்து வருகிறார் என்பது ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களின் மூலம் தெரிய வரும் நிலையில் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்ட சமன் நோக்கும் எழுந்துள்ளதாக தெரிய வருகிறது.

15) எனவே, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு முடிவடையும் வரை மனுதாரர் / வாதியின் மனுச் சொத்தின் மீதான சுவாதீன அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, உறவினர்களோ சட்டத்திற்கு புறம்பாக எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை நீதியின் நலன் கருதி மனுதாரர் / வாதிக்கு வழங்கி உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

16) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் / வாதியின் மனுச் சொத்தின் மீதான சுவாதீன அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ, உறவினர்களோ சட்டத்திற்கு புறம்பாக எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடிவடையும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 05.09.2009 | C.ஈஸ்வர செட்டியார் என்பவரின் பெயரிலுள்ள கொள்முதல் ரசீது |
| ம.சா.ஆ.2 | 29.03.2010 | C.ஈஸ்வர செட்டியார் என்பவரின் பெயரிலுள்ள கொள்முதல் ரசீது |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 23.05.2017 | C.ஈஸ்வர செட்டியார் என்பவரின் பெயரிலுள்ள கொள்முதல் ரசீது |
| ம.சா.ஆ.4 | 15.07.2019 | C.ஈஸ்வர செட்டியார் என்பவரின் பெயரிலுள்ள கொள்முதல் ரசீது |
| ம.சா.ஆ.5 | 19.03.2009 | தொழில் வரி ரசீது |
| ம.சா.ஆ.6 | - | 2018-2019 & 2019-2020ம் ஆண்டிற்கான தொழில் வரி ரசீது |
| ம.சா.ஆ.7 | 11.07.2008 | மின் கட்டண ரசீது |
| ம.சா.ஆ.8 | 22.02.2011 | மின் கட்டண ரசீது |
| ம.சா.ஆ.9 | 04.05.2017 | மின் கட்டண ரசீது |
| ம.சா.ஆ.10 | 30.12.2020 | மின் கட்டண ரசீது |
| ம.சா.ஆ.11 | 01.03.2021 | மின் கட்டண ரசீது |
| ம.சா.ஆ.12 | 17.01.2014 | மனுதாரர் / வாதியின் தகப்பனாரான வேணுகோபால் இறந்ததற்கான இறப்பு சான்று |

**எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

- இல்லை -

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.279/2021 இல் இ.ம.எண்.2/2021

நாள் : 05.01.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-------------------------------------------